பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

24 02 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு துணை நிற்கும் வகையில், ஐ நா அமைதிப்படையில் இந்தியா கூடுதலாக பங்களித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதியை அடுத்த நான்காண்டுகளில் 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர இந்தியாவும் – பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.

4. தென் சீன கடலில் அமைதியை நிலைநாட்டும் வகையில், ராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க ஜப்பான் – பிலிப்பைன்ஸ் நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவு முதல் ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>

சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு துணை நிற்கும் வகையில், ஐ நா அமைதிப்படையில் இந்தியா கூடுதலாக பங்களித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் மகளிர் அமைதிப்படை தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்றுள்ள பிரதிநிதிகளை குடியரசுத் தலைவர் மாளிகையில் அவர் இன்று சந்தித்து பேசினார்.

ஐ நா அமைதிப்படையில் இந்தியாவை சேர்ந்த இரண்டு லட்சத்து 90 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சேவையாற்றியிருப்பதாக அவர் கூறினார்.

இந்தியாவை சேர்ந்த மகளிர் அமைதிப்படையினர் இப்பணியில் சிறந்து விளங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் மக்களோடு எளிதாக பழகுவதிலும், அவர்களது நம்பிக்கையை பெறுவதிலும் மகளிர் அமைதிப்படையினரின் பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

நீண்டகால சமாதான உடன்படிக்கைகளை எட்டுவதில் அமைதிப்படையில் உள்ள மகளிரின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

<<<<<<>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசின் நடவடிக்கைகளால் கடந்த பத்தாண்டுகளில் ஜம்மு காஷ்மீர் மாற்றங்களை எதிர்கொண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஜம்மு காஷ்மீரை சேர்ந்த குழந்தைகள் மற்றும் இளையோர் பங்கேற்ற நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

சாலைகள், ரயில் பாதைகள், விமான நிலையங்களை விரிவாக்குவது உள்ளிட்ட உட்கட்டமைப்பு நடவடிக்கைகள் ஜம்மு காஷ்மீரில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அங்கு புதிதாக பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப மற்றும் மருத்துவ கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>

நாட்டின் தொழில்துறை அடுத்த ஐந்தாண்டுகளில் 350 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான வளர்ச்சியை எட்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இமாச்சலப்பிரதேசம் மண்டியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் 16-ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், நாட்டில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், இதன்மூலம் நாடு விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் மாணவர்கள் அதிகம் பங்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த நிதியாண்டில், நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 23 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாகவும், 2029-ல் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில், பாதுகாப்பு தொழில்துறையை வலுப்படுத்துவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர இந்தியாவும் - பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், பிரிட்டன் வர்த்தகத்துறை அமைச்சர் திரு **Jonathan Reynolds**—டன் இணைந்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசினார்.

பிரிட்டனில் நடைபெற்ற தேர்தல் காரணமாக, தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுக்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இருநாடுகளுக்கும் பலன் அளிப்பதாக அமையும் என்றும், வெளிப்படையானதாக மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இருநாடுகளின் வர்த்தகம், மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும் திரு பியூஷ்கோயல் குறிப்பிட்டார்.

<<<<<<>>>

விவசாயிகளின் நலன்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

பஞ்சாபின் அமிர்தசரஸில் உள்ள குருநானக்தேவ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

பீகாரில் நடைபெற்ற விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்ட நிதி விடுவிக்கும் நிகழ்ச்சியின் நேரலையை விவசாயிகளோடு இணைந்து திரு ஹர்தீப் சிங் புரி பார்த்தார்.

இதையடுத்து, விவசாயிகளிடம் பேசிய அவர், பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயிகள் விளங்குவதாக தெரிவித்தார்.

பெட்ரோலுடன் எத்தனால் கலந்து பயன்படுத்துவது முன்னர் ஒன்று புள்ளி ஐந்து சதவீதமாக இருந்ததாகவும், தற்போது இது 19 புள்ளி ஆறு சதவீதமாக உயர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை அதிகரிக்கும் முயற்சிகளை மத்திய அரசு தொடர்ந்துமேற்கொண்டு வருவதாகவும், இதன்மூலம் விவசாயிகள் பலனடைவார்கள் என்று திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<<>>>

தென் சீன கடலில் அமைதியை நிலைநாட்டும் வகையில், ராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க ஜப்பான் - பிலிப்பைன்ஸ் நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

பிலிப்பைன்ஸுக்கு இரண்டு நாள் பயணமாக சென்றுள்ள ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் திரு **Gen Nakatani,** பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் திரு **Gilberto Teodoro** –வை மணிலாவில் இன்று சந்தித்து பேசினார்.

இதையடுத்து, நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய திரு **Gen Nakatani,** பாதுகாப்பு சாதனங்கள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பாக இருநாட்டு ராணுவத்தின் உயர்நிலைக்குழு பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

<<<<<<>>>

வேளாண் பொருட்களின் ஏற்றுமதி, சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு இடையறாது மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் பாஹல்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் 19-ஆவது தவணைத் தொகையை விவசாயிகளின் வங்கிக்கணக்கிற்கு இன்று விடுவித்தார்.

நாட்டில் ஒன்பது கோடியே 80 லட்சம் விவசாயிகளுக்கு, 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, பிரதமர் விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், தங்களது வங்கிக்கணக்கில் இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கப்பெற்றது தங்களுக்கு பயனுள்ளதாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - திருவள்ளூர் விவசாயி – 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>

தெலங்கானா மாநிலம் ஸ்ரீசைலம் இடதுகரை கால்வாய் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த சனிக்கிழமையன்று மேற்கூரை இடிந்து விழுந்து நேரிட்ட விபத்தில் சுரங்கப்பாதையில் சிக்கியவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மீட்புக்குழுவினர் மேற்கொண்டு வருவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

சுரங்கப்பாதையில், நீர்கசிவு மற்றும் சேறு அதிகமாக தேங்கியதன் காரணமாக மீட்புப்பணி தாமதமாகி வருவதாகவும், சுரங்கப்பாதையில் இருந்து நீரை அகற்றும் பணி தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்து நேரிட்ட இடத்தை மாற்றுப்பாதையில் அடைவதற்கான உத்திகளையும் ஆராய்ந்து வருவதாக மீட்புப்படை கூறியுள்ளது.

<<<<<<>>>

தில்லி சட்டப்பேரவைத் தலைவராக திரு விஜேந்தர் குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, இன்று காலை சட்டப்பேரவைத் தொடங்கியதும், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தில்லி சட்டப்பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் பதவியேற்றுக்கொண்டனர்.

நாளை, தில்லி துணைநிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா சட்டப்பேரவையில் உரையாற்றுகிறார்

மேலும், முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடுகள் குறித்த தலைமை கணக்குக் குழுவின் அறிக்கை நாளை தாக்கல் செய்யப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – நெதர்லாந்து இடையேயான மகளிர் பிரிவு முதல் ஆட்டம் தற்போது புவனேஷ்வரில் நடைபெற்று வருகிறது.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஆடவர் பிரிவு முதல் ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-------------

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 7-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Aryan Shah** –ஐ வென்றார்.

-----------------

ஆசிய சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Harshita Jakhar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் பிரிவில் **Ronaldo Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.